# எனக்கு மட்டும் ஏன்...?

## நம்பிக்கையற்றவர்களுக்கான நம்பிக்கை



இதுவரை கேட்டிராத

மிகச்சிறந்த செய்தி!

உங்களை பாதிக்கும் உண்மைகள்!

**ஓர் ஆச்சரியமான உண்மை:** தன்னுடைய மகனை இழந்து இரண்டு வருடம் கழித்து, பொருளாதாரத்திலும் ஒரு பேரழிவை சந்தித்துக்கொண்டிருந்தார் சிக்காகோவின் தொழிளதிபரான ஹொராட்டியோ ஸ்பா∴போர்டு. (Horatio Spafford) இந்த நேரத்தில், தனது மனைவியும் நான்கு மகள்களும் பயணம் செய்த கப்பல் மூழ்கியது என்னும் செய்தி அவருக்குக் கிடைத்தது. அவரது நான்கு மகள்களும் மரித்துப்போன நிலையில் அவருடைய மனைவி மட்டுமே உயிர் பிழைத்தார். தன் மனைவியை அழைத்து வருவதற்காக ஒரு கப்பலில் பயணம்செய்துகொண்டிருந்த ஹொராட்டியோ தனது மகள்கள் மூழ்கி மரித்த இடத்தைப் பார்த்தார். இருதயம் உடைந்தவராய் அந்த நீர் கல்லறையை வெறித்துப் பார்த்துக்கொண்டிருக்கும்போது, உலகிலேயே அனைவராலும் மிகவும் விரும்பப்படும் "நதிபோல் களிகூர்தல் ("It is well with my soul") என்ற கிறிஸ்தவப் பாடலை எழுதவேண்டுமென மனம் உந்தியது..

அப்படிப்பட்ட துன்பமான சூழ்நிலையிலும் ஹொராட்டியோவின் விசுவாசம் நிலைநின்றதைக் குறித்து வரலாறு முழுவதிலும் ஏறத்தாழ ஒவ்வொரு நபரும், "ஏன் இப்படிப்பட்ட சூழ்நிலை?" "அன்பான தேவன் ஒருவர் இருந்தாரானால் ஏன் இப்படிப்பட்ட மோசமானக் காரியங்கள் நடக்கின்றன?" என ஆச்சரியப்பட்டுள்ளனர். இவ்வுலகில் தீமை ஏன் இருக்கவேண்டும்? சந்தேகத்திற்கிடமின்றி நீங்களும் உங்கள் வாழ்க்கையில் சோகத்தையும் பாடுகளையும் அனுபவித்திருப்பீர்கள் - "ஏன் எனக்கு மட்டும் இப்படி நடக்கிறது?" என்று கேள்வியை கேட்பது நியாயமானதுதான்.

இக்கேள்விகளுக்கான உண்மையான பதில்களை வேதம் வைத்துள்ளது என்பதுதான் உங்களுக்கான

நற்செய்தி! – அவைகள் உங்களையும் நிலைநிறுத்தும் நம்பிக்கையூட்டும்!

## தீமை மற்றும் பாடுகள் குறித்த வேதாகமம் சார்ந்த ஆறு உண்மைகள் இதோ!

## 1 தேவன் எதற்காகத் தீமையை அனுமதித்தார்?

"தேவன் அன்பானவர்" என்றும் (1 யோவான் 4:8), நீங்கள் விருத்தியடைந்து, ஒரு மகிழ்ச்சி நிரம்பிய எதிர்காலத்தைப் பெறவேண்டும் (எரே. 29:11) என்றும் அவர் விரும்புவதாக வேதம் வெளிப்படையாகக் கூறுகிறது. அப்படியென்றால், நாம் ஏன் தீமை மற்றும் பாடுகளை அனுபவிக்கிறோம்?

தேவன் உங்களுடன் ஓர் உண்மையான, அன்பான உறவை வைத்துக்கொள்ள விரும்புகிறார், ஆனால் உண்மையான அன்பு காணப்படவேண்டுமானால், மெய்யான சுதந்திரம் தரப்படவேண்டும். இந்த சுதந்திரத்தை அவர் ஒவ்வொருவருக்கும் கொடுத்திருக்கிறார். விசேஷமாக, பரலோகத்தில் கலகத்தைத் தூண்டிய, பூமியில் பாவத்தைக் கொண்டுவந்த, பொய்க்குப் பிதாவான (யோவான் 8:44) லூசிபர் என்னும் தூதனுக்கும் கொடுத்திருக்கிறார்.

தேவன் ஏன் சாத்தானை உடனடியாக அழித்துப்போடவில்லை? ஒருவேளை சாத்தான் தனது கலகத்தைத் துவக்கிய நேரத்திலேயே அழிக்கப்பட்டிருப்பானாயின், தேவதூதர்களும், உங்களையும் சேர்த்து மற்ற அறிவார்ந்த ஜீவராசிகளும் தேவனை அன்போடு தொழுதுகொள்வதற்கு பதிலாக நடுக்கத்தோடும் பயத்தோடும் தொழுதுகொண்டிருப்போம்.

எனவே, மற்றவர்கள் சாத்தானுடைய வழியைப் பின்பற்றுவதால் எத்தனை அதிகமான கேடு உண்டாகும் என்பதை அவனே

இந்த அண்டசாராசரத்திற்கும் செயல்முறை விளக்கமளிக்க தேவன் அனுமதித்தார். தேவனும், "...ஒருவரும் கெட்டுப்போகாமல் எல்லாரும் மனந்திரும்பவேண்டுமென்று விரும்பி, நம்மேல் நீடியபொறுமையுள்ளவராயிருக்கிறார்" (2 பேதுரு 3:9). இவ்வாறு, அவர், உங்களுக்குக் கொடுப்பதைப் போலவே, ஒவ்வொரு மனிதனுக்கும் அவரிடம் திரும்புவதற்குப் போதுமான காலத்தைக் கொடுத்துக்கொண்டிருக்கிறார்.

## 2 நல்லவர்களுக்கும் ஏன் தீமையான காரியங்கள் நடக்கின்றன?

வேதத்திலேயே மிகவும் நீதிமான் என்று அழைக்கப்பட்ட யோபு, சாத்தானால் நேரடியாகத் தாக்கப்பட்டான். ஆனால் யோபுவைத் துன்புறுத்த அவன் தேவனிடம் அனுமதி வாங்கவேண்டியிருந்தது (யோபு 1:8-12). உத்தமனும் சன்மார்க்கனுமான (வசனம் 1) ஒருவர்கூட திடீரென்று ஒரு துயரத்தை சந்திக்கலாம். ஒவ்வொருவருக்கும் துன்பங்கள் பல நிலைகளில் வருகின்றன.

தேவன் இந்த உலகத்தை ஒரு அழகானப் பரலோகம் போல படைத்திருந்தாலும், சாத்தான் அதைப் பாவத்தின்மூலம் அழிக்க வகைத் தேடுகிறான் என்பதை யோபுவின் சரித்திரம் விவரிக்கிறது. நம்முடைய சுயமான தேர்வுகள் மூலமாகவோ, மற்றவர்கள் மூலமாகவோ அல்லது சாத்தான் மூலமாகவோ துன்பங்கள் வருமென்று நாம் எதிர்பார்க்கலாம். கெட்ட சம்பவங்கள் நடக்கும்போது அநேகர் தேவனையே குறைகூறுவார்கள், ஆனால் இயேசு தம்முடைய உவமையில் ஓரிடத்தில், "எதிரி இதைச் செய்தான்" (மத்தேயு 13:28) என்று கூறுனார். தேவன் நல்லவர் என்பதை எப்பொழுதும் மறந்துவிடாதீர்கள்.

## 3 பணக்காரனோ ஏழையோ இதற்கு யாரும் விதிவிலக்கல்ல.

“தேவன், தீயோர்மேலும் நல்லோர்மேலும் தமது சூரியனை உதிக்கப்பண்ணி, நீதியுள்ளவர்கள்மேலும் அநீதியுள்ளவர்கள்மேலும் மழையைப் பெய்யப்பண்ணுகிறார்…” (மத்தேயு 5:45) என்பது உங்களுக்குத் தெரியுமா? தேவன் உங்களுக்கான நன்மையை வாஞ்சிக்கிறார்; சாத்தானோ அனைவரையும் துன்புறுத்தவே வாஞ்சிக்கிறான். கல்வியோ, செல்வமோ, இல்லை தகுதியோ இது எதுவுமே துன்பம் நம் வாழ்வில் பிரவேசிப்பதைத் தடுக்கமுடியாது.

தாவீது, இஸ்ரவேலை ஆளும்படி தேவனால் தேர்ந்தெடுக்கப்பட்டவன். அவன், பெருக்கமான செல்வத்தையும், அவனுடைய கலாச்சாரம் அவனுக்குத் தந்த சிறப்பானவைகளையும் பெற்றிருந்தான் - எனினும் அவன் தன் எதிரிகளால் துரத்தப்பட்டபோதும், அவனுடைய தனிப்பட்டப் பாவத்தினால் அவனுடைய பிள்ளைகளில் பலர் மரித்தபோதும் அவன் மாபெரும் துன்பத்தை அனுபவித்தான். துன்பங்கள் அனைவருக்கும் வரும். அந்தத் துன்பங்களை நாம் எவ்வாறு எதிர்கொள்ளுகிறோம் என்பதே முக்கியமாகும். பெருந்துயரத்தினால் வருந்தியபோதும், யோபு “கர்த்தருடைய நாமத்திற்கு ஸ்தோத்திரம்” (யோபு 1:21) என்று விசுவாசத்துடன் கூறினார்.

## 4 துயரங்கள் நம்மை தேவனுடன் நெருக்கமாக சேர்க்கமுடியும்.

“நான் உபத்திரவப்படுவதற்கு முன் வழிதப்பி நடந்தேன்; இப்பொழுதோ உம்முடைய வார்த்தையைக் காத்து நடக்கிறேன்…நான் உபத்திரவப்பட்டது எனக்கு நல்லது; அதினால் உமது பிரமாணங்களைக் கற்றுக்கொள்ளுகிறேன்” (சங்கீதம் 119:67, 71). நம்மைச் சுற்றியுள்ள உலகம் முழுவதும் நொறுங்கிவிழுந்தாலும்,

தேவனால் நமக்கு சமாதானத்தைத் தரமுடியும். நம்முடைய துன்பங்களை நீக்கி, நித்திய மகிழ்ச்சியினால் நிரப்ப அவரால் முடியும் (ஏசாயா 61:1-3).

மிகவும் சவாலான நேரங்களிலும் தேவனை நம்பக் கற்றுக்கொள்வதுதான் கிறிஸ்தவ குணத்தை வளர்ப்பதில் முக்கியப் பங்காகும். வேதம் கூறுகிறபடி, “அன்றியும், அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய்த் தேவனிடத்தில் அன்புகூறுகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறது…” (ரோமர் 8:28) என்றால், நம்மையும் பிறரையும் இரட்சிப்பதற்கு தேவனால் நம்முடைய துன்பங்களையும் பயன்படுத்தமுடியும். உங்கள் பாடுகள் மத்தியிலும் அவருடன் இணைந்து வேலைசெய்ய உங்களை ஒப்புக்கொடுங்கள்.

## 5 தேவன் எப்போதும் தம்முடைய பிள்ளைகளுடன் இருக்கிறார்.

தேவன் உங்களை படைத்திருக்கிறார் மற்றும் “உங்கள் தலையிலுள்ள முடியையெல்லாம் எண்ணிவைத்திருக்கிறார் (லூக்கா 12:7); உங்கள் நலனைக் குறித்து அவர் மிகவும் ஆழமான அக்கறைக் கொண்டிருக்கிறார். உங்கள் வெற்றிகளில் அவர் மகிழ்ச்சியடைகிறார்; நீங்கள் துன்பப்படும்போது அவர் கவலைகொள்கிறார்.

மேலும், இழப்பு என்பது தேவன் அறியாத ஒன்று அல்ல. இந்தப் பாவ உலகத்திலிருந்து உங்களை மீட்கும்படியாக மரித்த தன்னுடைய ஒரே பேறான குமாரனாகிய இயேசுவின் பாடுகளையும் தியாகபலியையும் அவரும் அனுபவித்தார். இதனால்தான், துன்பத்தின்போது தேவன் நமக்கருகில் இருக்கிறார் என்பதை வேதமும் நிச்சயித்துக்கூறுகிறது. “நொறுங்குண்ட இருதயமுள்ளவர்களுக்குக் கர்த்தர் சமீபமாயிருந்து, நறுங்குண்ட ஆவியுள்ளவர்களை

இரட்சிக்கிறார்" (சங்கீதம் 34:18). நீங்கள் வேதனையில் இருப்பீர்களென்றால், தேவன் உங்களுக்கருகில் இருக்கிறார் என்றும் அவர் உங்கள் மீது அக்கறைகொள்கிறார் என்றும் அறிந்துகொள்ளுங்கள்.

## 6 பாவமும் துன்பமும் ஒரு முடிவிற்கு வருமா?

நீங்கள் துன்பப்படும்போது, நம்பிக்கையற்ற நிலையில் காணப்படவேண்டுமென்பதே சாத்தானுடைய நோக்கமாகும். ஆனால் எப்படிப்பட்ட மோசமான சூழ்நிலையாக இருந்தாலும் அங்கே விசுவாசம், நம்பிக்கை மற்றும் அன்பு உங்களுக்கு உண்டு (1 கொரி. 13:13). பாவமும், தீமையும், பாடுகளும் முடிந்துபோகும் என்று தேவன் வாக்குரைக்கிறார்: "… சாயங்காலத்தில் அழுகை தங்கும், விடியற்காலத்திலே களிப்புண்டாகும்" (சங்கீதம் 30:5).

வெளிப்படுத்தல் 21:4ல் நாம் ஒரு விலையேறப்பெற்ற வாக்குத்தத்தத்தைக் காணமுடியும். சீக்கிரமாக, ஓர் நாள், உங்கள் கண்களிலிருக்கும் "கண்ணீர் யாவையும் தேவன் துடைப்பார்; இனி மரணமுமில்லை, துக்கமுமில்லை, அலறுதலுமில்லை, வருத்தமுமில்லை; முந்தினவைகள் ஒழிந்துபோயின என்று விளம்பினது." நாம் இயேசுவில் நம்பிக்கை வைக்கும்போது, நமது நிகழ்கால சோதனைகளில் நமக்கு உதவுவது மட்டுமல்லாமல், வலியும் வேதனையும் இல்லாத ஒரு நித்திய வாழ்வையும் நமக்கு வாக்குறைக்கிறார். இயேசுவின் மூலம் என்ன ஒரு அற்புதமான மீட்பின் திட்டம்!

இருள் சூழ்ந்த தனது துன்ப நேரத்தில் ஹொராட்டியோ எழுதியதுபோல, "துன்ப அலை மோதும்போதும், என் ஆத்மாவில் சமாதானம் உண்டு" என்று நீங்களும் கூறமுடியும்.




## இன்னும் தெரிந்துகொள்ள விரும்புகிறீர்களா?

“நிச்சயமான மரணத்திலிருந்து மீட்பு” என்ற இந்தப் பாடத்தை Certain03.AFTV.in-லிருந்து பதிவிறக்கம் செய்யவும். இந்தப் பாடம் தேவன் உங்களுக்காக வைத்துள்ள அவருடைய மீட்பின் திட்டத்தை சிறந்த முறையில் நீங்கள் புரிந்துகொள்ள உதவும்.

---

AMAZING FACTS

India

AmazingFactsIndia.org

Post Box No 51

Banjara Hills, Hyderabad 500034

+91 916 916 4480 | Bookstore.AFTV.in